# மே – 05 – சனி

## புனித ஆஞ்சலோ

## “என்னை அனுப்பியவரை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை” (யோ 15: 21)

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 16 : 1–10

அக்காலத்தில் பவுல் தெருபை, லிஸ்திரா ஆகிய நகர்களை வந்தடைந்தார். லிஸ்திராவில் திமொத்தேயு என்னும் பெயருள்ள சீடர் ஒருவர் இருந்தார். அவருடைய தாய் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட ஒரு யூதப்பெண். தந்தையோ கிரேக்கர்.திமோத்தேயு லிஸ்திராவிலும், இக்கோனியாவிலுமுள்ள சகோதரர் சகோதரிகளிடையே நற்சான்று பெற்றவர்.பவுல் அவரைத் தம்முடன் கூட்டிச்செல்ல விரும்பினார். அவ்விடங்களிலுள்ள யூதரின் பொருட்டு அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார். ஏனெனில் அனைவரும் அவருடைய தந்தை கிரேக்கர் என்று அறிந்திருந்தனர். அவர்கள் நகர் நகராகச் சென்றபோது எருசலேமிலுள்ள மூப்பரும் திருத்தூதரும் செய்த தீர்மானங்களை அவர்களிடம் கொடுத்துக் கடைப்பிடிக்குமாறு கூறினார்.இவ்வாறு திருச்சபைகள் நம்பிக்கையில் உறுதி பெற்று நாளுக்கு நாள் எண்ணிக்கையில் பெருகிவந்தன.பின்பு ஆசியாவில் இறைவார்த்தையை அறிவிக்காதவாறு தூய ஆவியார் தடுக்கவே, அவர்கள் பிரிகிய, கலாத்தியப் பகுதிகளைக் கடந்து சென்றனர்.அவர்கள் மீசியா அருகே வந்து பித்தினியாவுக்குச் செல்ல முயன்றபோது இயேசுவின் ஆவியார் அவர்களை அங்குப் போகவிடவில்லை.எனவே அவாகள் மீசியா வழியாகச் சென்று துரொவா நகரை அடைந்தனர்.பவுல் அங்கு இரவில் ஒரு காட்சி கண்டார். அதில் மாசிதோனியர் ஒருவர் வந்து நின்று, ”நீர் மாசிதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்” என்று வேண்டினார்.இக்காட்சியைப் பவுல் கண்டதும், நாங்கள் மாசிதோனியருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்துள்ளார் என எண்ணி, அங்குச் செல்ல வழி தேடினோம்.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே ஆண்டவரை ஆர்ப்பரித்த வாழ்த்துங்கள்

### நற்செய்தி : யோவான் 15 : 18 – 21

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: உலகு உங்களை வெறுக்கிறதென்றால் அது உங்களை வெறுக்கு முன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.
நீங்கள் உலகைச் சார்ந்தவர்களாக இருந்திருந்தால் தனக்குச் சொந்தமானவர்கள் என்னும் முறையில் உலகு உங்களிடம் அன்பு செலுத்தியிருக்கும். நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்துவிட்டேன். நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. எனவே உலகு உங்களை வெறுக்கிறது.பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்ல என்று நான் உங்களுக்குக் கூறியதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள் என்றால் உங்களையும் துன்புறுத்துவார்கள். என் வார்த்தையைக் கடைப்பிடித்திருந்தால் தானே உங்கள் வார்த்தையையும் கடைப்பிடிப்பார்கள்! என்பெயரின் பொருட்டு உங்களை இப்படியெல்லாம் நடத்துவார்கள். ஏனெனில் என்னை அனுப்பியவரை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

**தியானம்:** பரிகாரப் பலியாக வந்தவர் யேசு. அவர் மானிடர் மீட்பு பெறும் பொருட்டு கடவுளால் அனுப்பப் பட்டவர். ஆனால் அவரை இவ்வுலகம் ஏற்றுக் கொள்ள வில்லை. அவர் பாவிகளின் பக்கம் இருந்ததாலும், தச்சன் மகன் என்று அறியப் பட்டதாலும், சமுதாயத் தலைவர்களின் வெளி வேட வாழ்வை வெளிச்சத்திற்கு கொண்டு வந்ததாலும் அவர் புறக்கணிக்கப் பட்டார். ஒதுக்கப் பட்ட கல் கட்டடத்தின் மூலைக் கல்லாக அமையும் என்று அவரை அழிக்க நினைத்தவர்கள் சிந்தித்துப் பார்க்க வில்லை. மண்ணைத் தோண்டி புதைத்துவிட்டால் அவரின் வாழ்வும், சொல்லும் செயலும் மடிந்து போகும் என்று அதிகார வர்க்கம் நினைத்தது, புதைக்கப் படும் சிறு விதை பெரிய விருட்சமாக கிளை விட்டு வளரும் என்று பாவம் அவர்களுக்கு தெரியவில்லை. இன்று கிறிஸ்த்தவம் இல்லாத நாடு இல்லை. அன்று சீடர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புகளை துறந்து பணி செய்த படியால் தான் இன்று கிறிஸ்த்தவம் இவ்வாறு வேரூன்றி நிற்கிறது. சீடரின் தன்னலமற்ற வாழ்வை எம்மால் வாழ முடியுமா? ஒற்றுமையாக ஒருமித்த எண்ணம் கொண்டவர்களாக ஆவியார் காட்டிய பாதையில் அவர்கள் பயணித்தார்கள். அதனால் அவர்களால் வெற்றி அடைய முடிந்தது. ஆனால் இன்று எதிர்மறையான கருத்துக்களும், மனம் நோகும் பேச்சுக்களும் பணி செய்ய முன்வருவோரைக்கூட அதனை செய்ய விடாமல் தடுக்கின்றது. சிந்திப்போம். தடையாக இல்லாமல் படிகளாக மாறுவோம். ஆவியார் காட்டும் பாதையில் எம் வாழ்வை கொண்டு செல்ல துணையாளன் துணை புரிவாராக!